தமிழகம் முழுவதும் இன்று பக்ரீத் பண்டிகை கொண்டாட்டம்

இஸ்லாமியர்கள் சிறப்பு தொழுகை நடத்தி ஒருவருக்கொருவர் வாழ்த்துகளை பரிமாறினர்

ஏழைகளுக்கு உணவுப் பொருட்களை தானம் கொடுத்தனர்

சென்னை, மே 28– தமிழகம் முழுவதும் இன்று பக்ரீத் பண்டிகை கோலகலமாக கொண்டாட்டப்பட்டது.

ரம்ஜான் பண்டிகைக்கு அடுத்தப்படியாக இஸ்லாமியர்களின் முக்கிய பண்டிகையாக பக்ரீத் பண்டிகை கொண்டாடப்படுகிறது. இறை நம்பிக்கை, இரக்கம், சகோதரத்துவம், நல்லிணக்கம், தியாகத்தைப் போற்றும் வகையில் இஸ்லாமிய மாதமான துல்ஹிஜ்ஜின் 10ம் தேதி இறைவனின் கட்டளையை நிறைவேற்றும் பொருட்டு தனது மகனை பலியிட துணிந்த இறைத் தூதர் இப்ராஹிம் நபியின் தியாகத்தை நினைவுகூறும் விதமாக ஆண்டுதோறும் பக்ரீத் பண்டிகை கோலாகலமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்நிலையில், நாடு முழுவதும் பக்ரீத் பண்டிகை இன்று இஸ்லாமியர்களால் கொண்டாடப்பட்டு வருகிறது. பக்ரீத் பண்டிகையையொட்டி இஸ்லாமியர்கள் அனைவரும் புத்தாடை அணிந்து ஆண்கள் சிறப்பு தொழுகையில் ஈடுபடுவது வழக்கம். அந்த வகையில் இன்று அதிகாலையில் புத்தாடை அணிந்து இஸ்லாமியர்கள் சிறப்பு தொழுகையில் ஈடுபட்டனர். பக்ரீத் பண்டிகை கொண்டாடிய முஸ்லிம்கள், ஏழை மக்களுக்கு குர்பானியாக இறைச்சி மற்றும் உணவுப் பொருட்களை தானமாக அளித்தனர்.

சிறப்பு தொழுகை

சென்னையிலும் இன்று பக்ரீத் பண்டிகை உற்சாகமாக கொண்டாடப்பட்டு வருகிறது. காலையிலேயே இஸ்லாமியர்கள் புத்தாடை அணிந்து சிறப்பு தொழுகையில் ஈடுபட்டு ஒருவருக்கொருவர் வாழ்த்து தெரிவித்து மகிழ்ந்தனர். இதல் சிறுவர்களும் ஏராளமானோர்

பங்கேற்றனர். சென்னை பெரம்பூர், ஓட்டேரி, ராயபுரம், புரசைவாக்கம், அண்ணாநகர், ஐஸ் அவுஸ், வண்ணாரப்பேட்டை, தண்டையார் பேட்டை, கொடுங்கையூர் உள்ளிட்ட சென்னை முழுவதும் உள்ள மசூதிகளில் நடந்த சிறப்பு தொழுகையில் ஏராளமான இஸ்லாமியர்கள் பங்கேற்றனர்.

விழுப்புரம்

பக்ரீத் பண்டிகையை முன்னிட்டு, விழுப்புரம் நகராட்சி மைதானத்தில் தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத் சார்பில் சிறப்பு தொழுகை நடைபெற்றது. இதில் தவ்ஹீத் ஜமாத் பேச்சாளர் இப்ராஹிம் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார். விழுப்புரம் மாவட்டம் முழுவதும் உள்ள செஞ்சி, கோட்டக்குப்பம், திண்டிவனம் உள்ளிட்ட பகுதிகளில் இருக்கும் முக்கிய பள்ளிவாசல்கள் உட்பட மொத்தம் 134 பள்ளிவாசல்களில் பக்ரீத் சிறப்பு தொழுகை மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இதில் திரளான இஸ்லாமியர்கள் கலந்துகொண்டு, பரஸ்பரம் கைகுலுக்கியும், கட்டித்தழுவியும் தங்களது வாழ்த்துகளையும் அன்பையும் பரிமாறிக்கொண்டனர்.

தொழுகை நிறைவு பெற்றதைத் தொடர்ந்து, ஏழை எளிய மக்களுக்குப் புத்தாடைகளும், உணவுகளும் தானமாக வழங்கப்பட்டன. பின்னர், இஸ்லாமியர்கள் தங்களது வீடுகளில் பிரியாணி உள்ளிட்ட அறுசுவை உணவுகளை சமைத்து, உறவினர்களுக்கும் மாற்று மத நண்பர்களுக்கும் வழங்கி மகிழ்ந்தனர். மதம் கடந்த மனிதநேயத் திருவிழாவாக விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் பக்ரீத் பண்டிகை இன்று களைகட்டியுள்ளது.

நெல்லை

நெல்லை மாவட்டத்தில் இஸ்லாமியர்கள் அதிகம் வசிக்கு பகுதியான மேலப்பாளையத்தில் அதிகாலை முதலே இஸ்லாமியர்கள் புத்தாடைகள் உடுத்தி தொழுகையில் ஈடுபட்டனர். தமிழகம் முழுவதும் திறந்தவெளி மைதானங்கள் மற்றும் மசூதிகளில் சிறப்பு தொழுகைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஒவ்வொரு மைதானங்களில் நடந்த தொழுகையிலும் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர். அனைத்து மக்களும் அமைதியோடு வாழ வேண்டும். நாட்டில் அமைதி நிலவ வேண்டும் என்று இஸ்லாமியர்கள் பிரார்த்தனை செய்தனர்.

இதே போல் தமிழ்நாடு முழுவதும் இஸ்லாமியர்கள் சிறப்பு தொழுகை நடத்தி ஒருவொருக்கொருவர் வாழ்த்துக்களை பரிமாறிக் கொண்டனர். மேலும் ஏழைகளுக்கு இறைச்சி உள்பட உணவுப் பொருட்களை தானமாக வழங்கி மகிழ்ந்தனர்.

ராயபுரம் ஆர்.மனோ 60–வது பிறந்தநாள்: எடப்பாடி பழனிசாமி நேரில் வாழ்த்து

சென்னை, மே 28– முன்னாள் முதலமைச்சர், அண்ணா திமுக பொதுச்செயலாளர், எடப்பாடி பழனிசாமி, அண்ணா திமுக அமைப்பு செயலாளர் ராயபுரம் ஆர்.மனோவின் 60–வது பிறந்த நாள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவருடைய குடும்பத்தாரை சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்.

உடன் முன்னாள் அமைச்சர்கள் டி. ஜெயக்குமார், என்.தளவாய் சுந்தரம், எஸ்.கோகுலஇந்திரா, மாதவரம் மூர்த்தி, மாவட்ட செயலாளர்கள் வேளச்சேரி அசோக், திருமங்கலம் மோகன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், நண்பர்கள், உறவினர்கள் என ஏராளமான பேர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சிக்கு வந்த எடப்பாடி பழனிசாமிக்கு மேளதாளம் முழங்க உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

தங்கம் விலை இன்று சவரனுக்கு ரூ. 1200 குறைவு

சென்னை, மே 28– ஆபரணத் தங்கத்தின் விலை கடந்த 2 நாட்களாக குறைந்து வரும் நிலையில், இன்று ஒரே நாளில் அதிரடியாக சவரனுக்கு 1,200 ரூபாய் விலை குறைந்துள்ளது.

இதேபோல், வெள்ளியின் விலையும் கிராமிற்கு 5 ரூபாய் குறைந்துள்ளது.

தங்கம் விலை கடந்த சில நாட்களாக ஏற்றமும், இறக்கமுமாக இருந்து வருகிறது. அந்த வகையில் சென்னையில் நேற்று முன்தினம் தங்கத்தின் விலை ரூ.400 குறைந்து ரூ.1,17,840க்கு விற்பனை செய்யப்பட்டது. கிராமுக்கு ரூ.50 குறைந்து ஒருகிராம் ரூ.14,730க்கு விற்பனை செய்யப்பட்டது. நேற்று சென்னையில் ஆபரண தங்கத்தின் விலை மீண்டும் சரிவை சந்தித்தது. அதன்படி, சென்னையில் ஆபரணத்தங்கம் விலை சவரனுக்கு ரூ.640 குறைந்து ஒரு சவரன் ரூ.1,17,000க்கு விற்பனை செய்யப்பட்டது. ஒரு கிராம் தங்கம் ரூ.80 குறைந்து ரூ.14,650க்கு விற்பனை செய்யப்பட்டது. வெள்ளியின் விலையில் நேற்று மாற்றமில்லை. சென்னையில் வெள்ளி விலை கிராமிற்கு ரூ.295க்கு விற்பனை செய்யப்பட்டு ஒரு கிலோ வெள்ளி ரூ.2,95,000க்கு விற்பனை செய்யப்பட்டது.

சவரன் ரூ. 1200 குறைவு

இந்நிலையில் இன்று தங்கத்தின் விலை ஒரே நாளில் அதிரடியாக குறைந்துள்ளது. கிராமுக்கு 150 ரூபாய் குறைந்து 14,500 ரூபாய்க்கும், சவரனுக்கு 1,200 ரூபாய் குறைந்து 1,16,000 ரூபாய்க்கு விற்பனையாகிறது.

இதே போல வெள்ளியின் விலையும் குறைந்துள்ளது. இன்று கிராம் ஒன்றுக்கு 5 ரூபாய் குறைந்து 285 ரூபாய்க்கும், ஒரு கிலோ பார் வெள்ளிக்கு 5000 ரூபாய் குறைந்து, 2 லட்சத்து 85 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

வைகாசி விசாகம்: எழும்பூரிலிருந்து நாளை திருச்செந்தூருக்கு சிறப்பு ரெயில்

சென்னை, மே 28– வைகாசி விசாகத்தை முன்னிட்டு எழும்பூரிலிருந்து நாளை திருச்செந்தூருக்கு சிறப்பு ரெயில் சேவை இயக்கப்படுகிறது.

வைகாசி விசாகத்தை முன்னிட்டு, சென்னை – திருச்செந்தூர் இடையே சிறப்பு ரெயில் இயக்கப்பட வேண்டும் என பயணிகள் மத்தியில் கோரிக்கை வைக்கப்பட்டது. அதன் பேரில் எழும்பூர் – திருச்செந்தூர் இடையே சிறப்பு ' ரெயில்கள் இயக்கப்பட உள்ளது.

அதன்படி, சென்னை எழும்பூரில் இருந்து நாளை (வெள்ளிக்கிழமை) மதியம் 2.30 மணிக்கு புறப்படும் சிறப்பு ரெயில் (வண்டி எண்.06155), மறுநாள் அதிகாலை 3 மணிக்கு திருச்செந்தூர் சென்றடையும். மறுமார்க்கமாக, திருச்செந்தூரில் இருந்து வருகிற 30ந்தேதி இரவு 11.15 மணிக்கு புறப்படும் சிறப்பு ரெயில் (06156) மறுநாள் காலை 11.30 மணிக்கு எழும்பூர் வந்தடையும்.

இந்த ரெயில்களுக்கான முன்பதிவு இன்று (வியாழக்கிழமை) காலை 8 மணிக்கு தொடங்கியது.

தவெக கூட்டணிக்கு எதிர்ப்பு: இளைஞர் காங்கிரஸ் தேசிய செயலாளர் ஸ்ரீநிதி விலகல்

சென்னை, மே 28 தவெக கூட்டணியில் காங்கிரஸ் இணைந்ததற்கு எதிர்ப்பு தெரிவித்து அகில இந்திய இளைஞர் காங்கிரஸ் தேசியச் செயலாளர் வி.ஸ்ரீநிதி தனது பதவியையும், கட்சியின் முதன்மை உறுப்பினர் பொறுப்பையும் அதிரடியாக ராஜினாமா செய்துள்ளார்.

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் திமுக கூட்டணியில் அங்கம் வகித்த காங்கிரஸ் கட்சிக்கு நீண்ட இழுபறிக்கு பின்னர் 28 தொகுதிகள் ஒதுக்கப்பட்டன. இதில் 5 தொகுதிகளில் மட்டுமே அக்கட்சி வெற்றி பெற்றது. குறிப்பாக, சிங்காநல்லூர் தொகுதியில் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட ஸ்ரீநிதி, 65,024 வாக்குகள் பெற்றுத் தோல்வியடைந்தார்.

இதனிடையே, தேர்தலுக்குப் பிறகு காங்கிரஸ் கட்சி தமிழக வெற்றிக் கழகத்திற்கு ஆதரவு அளித்தது. தவெக அமைச்சரவையில் காங்கிரஸைச் சேர்ந்த ராஜேஷ்குமார், விஸ்வநாதன் ஆகிய இருவரும் அமைச்சர்களாகப் பொறுப்பேற்றுள்ளனர். இந்நிலையில், ஸ்ரீநிதி காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகி உள்ளார்.

இதுகுறித்து அவர் காங்கிரஸ் தலைமைக்கு எழுதியதாகக் கூறப்படும் கடிதம் ஒன்று சமூக வலைதளங்களில் வேகமாகப் பரவி வருகிறது. அக்கடிதத்தில், "மிகுந்த வலியுடனும், ஆழ்ந்த மன உளைச்சலுடனும், நீண்ட சிந்தனைக்குப் பிறகும் எனது

பதவிகளை ராஜினாமா செய்கிறேன். தேசிய ஜனநாயக கூட்டணியிலிருந்து வெளியேறிய மூன்று எம்.எல்.ஏக்களை (தவெக) கட்சியில் இணைக்கும் சமீபத்திய முடிவு, எனது மனசாட்சியை ஆழமாகப் பாதித்துள்ளது.

எப்படி கை குலுக்க முடியும்?

பிரிவினைவாத சக்திகளுடன் இணைவதில்லை என்று கூறிவந்த காங்கிரஸ் கட்சி, இப்போது எடுத்துள்ள இந்த முடிவு அரசியல் கொள்கைகளின் நிலைத்தன்மை மற்றும் தெளிவு குறித்துக் கடுமையான கேள்விகளை எழுப்புகிறது. ஏற்கனவே கூட்டணியால் பலன் அடைந்த எம்பிக்கள், எம்எல்ஏக்கள் மற்றும் மூத்த தலைவர்கள் எளிதாக இத்தகைய முடிவுகளை எடுக்கிறார்கள். ஆனால், தேர்தல் களத்தில் நின்ற அடிமட்டத் தொண்டர்களும் எங்களைப் போன்றவர்களுமே இதன் விளைவுகளைச் சந்திக்க வேண்டியிருக்கிறது.

கடுமையான உழைப்பால் தான் சிங்காநல்லூர் தொகுதியில் என்னால் 65,024 வாக்குகளைப் பெற முடிந்தது. நேற்று என்னைத் தோற்கடித்த ஒருவருடன் இன்று நான் எப்படி கைகுலுக்க முடியும்? அவரது வெற்றி, பொதுமக்களின் பார்வையில் அவரது தனிப்பட்ட உழைப்பை விட, அவரது தலைவரின் (விஜய்) நட்சத்திர ஆளுமை மற்றும் செல்வாக்கினால்தான் கிடைத்தது என்பது அனைவருக்கும் தெரியும்.

வெறும் தேர்தல் வெற்றிகளுக்காக அல்லாமல், கொள்கை, மரியாதை மற்றும் மக்களின் குரலுக்கான பெரிய போராட்டத்திற்காக அரசியலுக்கு வந்தேன். வெற்றி மட்டுமே எனது இலக்காக இருந்திருந்தால் தயக்கமின்றி தொடர்ந்திருப்பேன். எனவே, இந்திய தேசிய காங்கிரஸ் இளைஞர் அணியின் தேசிய செயலாளர் பதவியிலிருந்தும், கட்சியின் அனைத்து முதன்மை உறுப்பினர் பதவிகளிலிருந்தும் உடனடியாக ராஜினாமா செய்கிறேன்".

"இது வெறும் பதவி விலகல் மட்டுமல்ல; தலைமைக்கு இடையே ஏற்பட்ட நம்பிக்கைச் சரிவை இனியும் ஏற்றுக்கொள்ள முடியாத மனசாட்சியின் உந்துதலால் எடுக்கப்பட்ட ஒரு நடவடிக்கை," என்றும் அவர் கூறி உள்ளார்.

GEM SPINNERS INDIA LTD

Regd. Office: 14, Mangalam Village, Madhuranthangam Taluk, Kancheepuram District - 603 107
Corporate Office: 78, Cathedral Road, Chennai - 600086
CIN: L17111TN1990PLC019791 E-mail ID: secretarial@gemspin.com

STATEMENT OF FINANCIAL RESULTS FOR THE FOURTH QUARTER AND YEAR ENDED 31st MARCH, 2026 (AUDITED)

(Rs. in lakhs)

Sl No.	Particulars	Quarter ended			Previous Year Ended	
		31.03.2026 Audited	31.12.2025 Unaudited	31.03.2025 Audited	31.03.2026 Audited	31.03.2025 Audited
1	Total Income from operations	0.00	0.00	0.00	0.00	0.00
2	Net Profit / (Loss) for the period (before Tax, Exceptional and/or Extraordinary items)	(8.78)	(8.69)	(17.72)	(40.98)	(65.94)
3	Net Profit / (Loss) for the period before Tax (after Exceptional and/or Extraordinary items)	(8.78)	(8.69)	(17.72)	(40.98)	(65.94)
4	Net Profit / (Loss) for the period after Tax (after Exceptional and/or Extraordinary items)	(8.78)	(8.69)	(17.72)	(40.98)	(65.94)
5	Total Comprehensive Income for the period [Comprising Profity/(Loss) for the period (after tax) and	(8.78)	(8.69)	(17.72)	(40.98)	(65.94)
6	Equity Share Capital	3068.60	3068.60	3068.60	3068.60	3068.60
7	Reserves (excluding Revaluation Reserve)	(3334.23)	(3325.45)	(3293.25)	(3334.23)	(3293.25)
8	Net worth	(265.63)	(256.85)	(224.65)	(265.63)	(224.65)
9	**Earnings Per Share (of Rs.___/- each) (for continuing and discontinued operations) -**					
	(a) Basic	(0.01)	(0.01)	(0.03)	(0.07)	(0.11)
	(b) Diluted					

Note: The above is an extract of the detailed format of Quarterly / Nine Months Ended Financial Results filed with the Stock Exchange under Regulation 33 of the SEBI (Listing and Other Disclosure Requirements) Regulations, 2015. The full format of the Quarterly / Nine Months Ended Financial Results are available on the Stock Exchange websites (www.bseindia.com)
The above results have been reviewed by the Audit Committee and the same were approved and taken on record by the Board of Directors at the meeting held on 27th May 2026

for GEM SPINNERS INDIA LIMITED
R. VEERAMANI
MANAGING DIRECTOR

Place: Chennai
Date : 27.05.2026

எம்எம் போர்ஜிங்ஸ் லிமிடெட்

கார்ப்பரேட் அலுவலகம்: ஏ25,எஸ்விகே டவர்ஸ், 8வது தளம், தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை 600 032.
Ph : 91-44-71601000 corporate@mmforgings.com CIN : L51102TN1946PLC001473

(ரூ. கோடியில்)

விவரங்கள்	ஒருங்கிணைந்தது				
	முடிந்த காலாண்டு			முடிந்த ஆண்டு	
	31-03-2026 தணிக்கை யானது	31-12-2025 தணிக்கை யாகாதது	31-03-2025 தணிக்கை யானது	31-03-2026 தணிக்கை யானது	31-03-2025 தணிக்கை யானது
1. செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம்	430.33	416.28	377.07	1605.49	1547.83
2. சாதாரண நடவடிக்கை மூலம் நிகர லாபம்/(நஷ்டம்) அசாதாரண அயிட்டங்கள்	35.44	25.48	40.09	114.27	165.68
3. வரிக்கு முன், விலக்கு மற்றும் அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின் சாதாரண நடவடிக்கை மூலம் நிகர லாபம்/(நஷ்டம்)	35.41	26.07	40.11	114.82	165.73
4. வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்)	44.75	17.57	31.61	98.67	121.86
5. சமபங்கு மூலதனம்	48.28	48.28	48.28	48.28	48.28
6. கடந்த ஆண்டு இருப்பு நிலை குறிப்பில் கூறியுள்ளபடி மறுமதிப்பீட்டு ரிசர்வுகள் நீங்கலான ரிசர்வுகள்					
7. பங்கு ஒன்றுக்கான சம்பாத்தியம்					
(ஏ) அடிப்படை	9.27	3.64	6.55	20.44	25.24
(பி) டைலூட்டட்	9.27	3.64	6.55	20.44	25.24

குறிப்புகள்:
SEBI (எல்ஓடிஆர்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சில் தாக்கல் செய்யப்பட்ட 31 மார்ச் 2026–ல் முடிந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான ஒருங்கிணைந்த தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ்சுகளின் இணையதளங்கள் www.nseindia.com, மற்றும் www.bseindia.com மற்றும் www.mmforgings.comல் உள்ளது. கம்பெனி ஒரே ஒரு செயல்பாடுகளில் மட்டும் ஈடுபட்டுள்ளது. தேவையான இடங்களில் புள்ளிவிவரங்கள் மீண்டும் தொகுக்கப்பட்டுள்ளன. மே 27, 2026 அன்று நடைபெற்ற இயக்குனர்கள் குழு கூட்டத்தில், பங்குதாரர்களின் ஒப்புதலுக்கு உட்பட்டு, ஒரு பங்குக்கு ரூ.4 இடைக்கால ஈவுத்தொகையாக பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

தேதி : 27 மே, 2026
இடம்: சென்னை

குழுவின் சார்பாக
வித்யாசங்கர் கிருஷ்ணன்
தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர்

மைய சீட்டு நிதிச்சட்டம் 1982
பிரிவு 64ன் படி விருத்தாசலம் துணைச்சீட்டு பதிவாளர் நடுவர் தீர்ப்பு மன்றம்
முன்னிலை : செல்வி. கி.கா.தீபிகா, உதவிச்சீட்டுப்பதிவாளர், மாவட்டப்பதிவாளர் அலுவலகம் (ராணி மஹால் அருகில்) விருத்தாசலம்.
நடுவர் வழக்கு எண் : 91/2026

சீட்டு நடத்துனர்
ஜெயப்பிரியா சிட்பண்ட்ஸ் (பி) லிட் விருத்தாசலம். வாதி
1.K. விஸ்வநாதன், த/பெ.காமராஜ், நெ.17, கிருஷ்ணா கார்டன், 2வது தெரு, பிச்சாண்டார் கோவில், திருச்சி 621 216.
2.V.செந்தில்குமார், த/பெ.வீரமலை, நெ.618, தெற்குத் தெரு, திருவளர்சோலை, ஸ்ரீரங்கரம், திருவானைக்கோயில், திருச்சி 620 005.
3.G.வீரமணி, த/பெ.குணசேகரன், புதிய முகவரி: நெ.A2/427, பெல் டவுன்ஷிப், கைலாசபுரம், திருச்சி. பழைய முகவரி: நெ.16, மாரியம்மன் கோவில், கொட்டாபட்டி, திருச்சி.
4.N.இளவரசன், த/பெ.நாகரத்தினம், நெ.27, பள்ளர் தெரு, மேலமஞ்சமேடு, காட்டுப்புத்தூர், திருச்சி. பிரதிவாதிகள்
ஜெயப்பிரியா சிட்பண்ட்ஸ் (பி) லிட் விருத்தாசலம் கிளை அலுவலகத்தில் என்ற சீட்டு நிறுவனத்திற்கு செலுத்தப்பட வேண்டிய பாக்கித் தொகை ரூ.83,290/ தொடர்பான வழக்கு 09.06.2026 அன்று முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற உள்ளது. மேற்படி தேதியன்று விருத்தாசலம் மாவட்டப்பதிவாளர் அலுவலகத்தில் என் முன்னிலையில் நடுவர் தீர்ப்பு மன்றத்தில் ஆஜராகி ஆட்சேபனை இருந்தால் எழுத்து மூலமாக தெரிவிக்க இதன் மூலம் அறிவிக்கப்படுகின்றது. தவறும் பட்சத்தில் 1984 ம் வருடத்திய தமிழ்நாடு சீட்டு நிதிகள், விதி 49(4)ன் படி ஒரு தலைபட்சமாக (EXPARTE) தீர்ப்பளிக்கப்படுமென்பதும் அறிவிக்கப்படுகின்றது.

உதவிச்சீட்டுப்பதிவாளர்
விருத்தாசலம்.

ஈசாப் இந்தியா லிமிடெட்

CIN:L29299TN1987PLC058738
பதிவு அலுவலகம் : பிளாட் எண் 13, 3வது பிரதான சாலை, அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை- 600 058.
தொ.பேசி எண். 044-4228 1100, இ-மெயில்: investor.relations@esab.co.in

மார்ச் 31, 2026 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆண்டிற்கான நிதிநிலை முடிவுகள்

ரூ. லட்சங்களில் (EPS தவிர)

வ.எண்	விவரங்கள்	முடிவடைந்த காலாண்டு			முடிவடைந்த ஆண்டு	
		மார்ச் 31 2026 (தணிக்கை செய்யப்படாதது)	டிசம்பர் 31 2025 (தணிக்கை செய்யப்படாதது)	மார்ச் 31 2025 (தணிக்கை செய்யப்படாதது)	மார்ச் 31 2026 (தணிக்கை செய்யப்பட்டது)	மார்ச் 31 2025 (தணிக்கை செய்யப்பட்டது)
1	மொத்த செயல்பாடுகள் மூலம் வருமானம்	39,749	37,990	36,977	1,51,418	1,38,125
2.	இக்காலத்திற்கான நிகர லாபம் (வரிக்கு முன், சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு முன்)	5,969	7,183	6,253	25,674	23,572
3	இக்காலத்திற்கான வரிக்கு முன் நிகர லாபம் (சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு பின்)	5,969	5,818	6,253	27,400	23,572
4	இக்காலத்திற்கான வரிக்கு பின் நிகர லாபம் (சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு பின்)	4,355	4,300	4,743	20,669	17,542
5	இக்காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் [இக்காலத்திற்கான வருமானம் உள்ளடக்கிய லாபம் (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்)]	4,363	4,278	4,725	20,646	17,524
6	சமபங்கு மூலதனம்	1,539	1,539	1,539	1,539	1,539
7	பிற பங்கு	-	-	-	41,399	34,586
8	பங்கு விகித ஈட்டுத்தொகை (ஒவ்வொரு பங்கு ரூ.10/-) (தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகள்)					
	அ) அடிப்படை	28.30	27.94	30.82	134.30	113.98
	ஆ) குறைமதிப்பு	28.30	27.94	30.82	134.30	113.98

குறிப்பு : மேற்குறிப்பிடப்பட்டவைகள் 2015-ம் வருடத்திய SEBI (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்துதல்) விதிமுறைகளில் 33-வது விதிமுறையின் கீழ். பங்கு வர்த்தக நிறுவனத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மார்ச் **31, 2026**-ன் முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆண்டிற்கான நிதிநிலை முடிவுகளின் தேர்ந்தெடுக்கப்பட்டவைகள் ஆகும். காலாண்டு மற்றும் ஆண்டிற்கான நிதிநிலை முடிவுகளின் முழு படிவமும் கம்பெனியின் www.esabindia.com என்ற இணையதளத்திலும், பங்கு வர்த்தக நிறுவனத்தின்-BSE Limited மற்றும் NSE India Limited இணையதளத்திலும் காணலாம்.

சென்னை
மே **27, 2026**

"Shaping the world we imagine"
Visit our website : https://www.esabindia.com

ஈசாப் இந்தியா லிமிடெட்டுக்காக
ரோஹித் கம்பீர்
மேலாண்மை இயக்குனர்

Edited, Printed and Published by R. Muthu Kumar at No. 1, First Main Road, United India Colony, Kodambakkam, Chennai-600 024 and printed at Print House, No.1 First Main Road, United India Colony, Kodambakkam, Chennai-600024 on behalf of M/s. Newsmen Associates Private Limited. RNI No. 24383/1973. நிர்வாகம், விளம்பரம், சர்குலேஷன் போன்: 24733910, E-mail : makkalkural@gmail.com, ஆசிரியர் குழு இ–மெயில்: makkalkural.news@gmail.com நிறுவன ஆசிரியர்: எம். சண்முகவேல். Subject to Madras Court Jurisdiction.